# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 16.09.2019**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 6141/D/2019**

திரு A. செல்வராஜு ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர், ... பொது அதிகார அமைப்பு
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
கிண்டி, சென்னை - 600 025.

****

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (16.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு A. செல்வராஜு ஆஜராகவில்லை. அவர் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைத்துள்ள 13.09.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்று தெரிவித்துள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திருமதி வ. ஜெயந்தி, தொழில்நுட்ப உதவியாளர் (புகார் பிரிவு), தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 18.02.2019 தேதியிட்டு தொழில் நுட்பக் கல்வி இயக்ககப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கோவை தொழில் நுட்பக் கல்லூரியின் Civil Department-ல் பணிபுரியும் ஒரு பேராசிரியரின் பெயரை குறிப்பிட்டு, அவருக்கு பணி முன்னடைவுத் திட்டத்தின் கீழ் (Career Advancement Scheme) பேராசிரியர் பதவியானது முன் தேதியிட்டு வழங்கப்பட்டிருப்பின் அது குறித்த விவரம், அப்பேராசிரியர் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பெற்றுள்ள சான்றிதழ்களின் விவரம் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 3 இனங்களில் ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. தொழில் நுட்பக் கல்வி இயக்ககப் பொதுத் தகவல் அலுவலர் 22.03.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுவில் கோரியுள்ள தகவல்கள் மூன்றாம் நபர் தொடர்புடைய தகவல்கள் என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 11-ன்படி சம்பந்தப்பட்ட நபரிடம் அவர் சார்ந்த தகவல்களை வழங்கலாமா என்பது குறித்து அலைபேசி வாயிலாக கருத்து கோரப்பட்டதற்கு, அதற்கு தனியர் தன்னுடைய 20.03.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக அவர்தம் தொடர்பான தகவல்களை மூன்றாம் நபருக்கு வழங்க

வேண்டாம் என தனது கருத்தினை தெரிவித்துள்ளதன்படி தகவல் வழங்க வழிவகையில்லை என்று மனுதாரருக்கு தெரிவித்துள்ளார். தனக்கு தகவல் மறுக்கப்பட்ட காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் 01.04.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை தொழில் நுட்பக் கல்வி இயக்கக முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் 08.05.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 8(1)(j)-ன்படி தனிப்பட்டவர் தகவல் தொடர்பான எந்த தகவலையும் வழங்க வேண்டியதில்லை என்று மனுதாரருக்கு தெரிவித்துள்ளார். தனக்கு தகவல் மறுக்கப்பட்ட காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான 27.06.2019 தேதியிட்ட தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைத்து, தான் கோரிய தகவல்களை முழுமையாக பெற்றுத் தருமாறு கோரியுள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இவ்வாணையத்தால் இன்று (16.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரானப் பொதுத் தகவல் அலுவலர், பணி முன்னடைவுத் திட்டத்தின் (Career Advancement Scheme) கீழ், கல்வித்தர ஊதிய நகர்வு வழங்குவது தொடர்பாக குழு அமைக்கப்பட்டு, அக்குழுவினால் அனைத்து கல்வி மற்றும் பயிற்சி சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்ட பிறகு, அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே, மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பேராசிரியருக்கு பணி முன்னடைவுத் திட்டத்தின் (Career Advancement Scheme) கீழ், கல்வித்தர ஊதிய நகர்வு வழங்கப்பட்டுள்ளது என்று எடுத்துரைத்தார். மனுதாரர் இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள மின்னஞ்சல் வாயிலாக தனக்கு மற்றொரு வாய்ப்பு வழங்கக் கோரியுள்ளார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தில் விசாரணையின் போது எடுத்துரைத்த விளக்கங்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு தகவல்களாக பதிவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகிறது. அத்தகவல் மனுதாரருக்கு கிடைக்கப்பெறாத நிலையில், மனுதாரர் இவ்வாணையத்திற்கு புகார் தெரிவிக்கலாம்.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்.**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6141/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
கிண்டி, சென்னை - 600 025.

**<u>மனுதாரர்:-</u>**

திரு A. செல்வராஜு,
நெ.9, 3வது வீதி, V.N.R. நகர்,
வடவள்ளி, கோயம்புத்தூர் - 641 041.

Copy to: File / Stock file
KVPS 20.09.2019